1992 ஏப்ரல் 28]

தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. இப்போது அந்தமாதிரி சர்க்கரை ஆலைகள் மூலமாக — அரசு சர்க்கரை ஆலைகள் பணம் கொடுத்து கிணற்றை வெட்டிப்போட்ட விவசாயிகள் அந்தப் பணத்தை திருப்பிக் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள், அவர்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து, தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற திட்டத்தின்படி அவர்கள் நிலவள வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் மண்டல கிராம வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு—கடன் பெற்று கிணறுகள் தோண்டி பொய்த்துப் போனால் நிதியிலிருந்து மானியம் வழங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். இதைத் தனிக்கேள்வியாகப் போட்டால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 658, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

658—

வால்பாறையில் தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைத்தல்.

*5336—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயன் தரும் வகையில் தொழிற்பயிற்சிக் கல்லூரி (Job Oriented) அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிலாளர் நல வாரியத்தால் நடத்தப்படுவதில்லை. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககத்தால் நடத்தப்படுகின்றன. வால்பாறையி

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயன்தரும் வகையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 40,000 நிரந்தரத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும், 20,000-க்கு மேலாக தற்காலிக தொழிலளார்களும் பணியாற்றுகின்ற அந்தப் பகுதியில் 1952 ஆம் ஆண்டு அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மகாலிங்கம் முதல் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குறைகளைத் தீர்க்கிற வண்ணம் ஒரு தொழில் கல்லூரியோ, கலைக் கல்லூரியோ அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்தவகையில் என்னுடைய தொகுதியில் அரசினுடைய சில திட்டங்களைக் குறைத்துக் கொண்டாவது ஒரு கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் நிச்சியமாக இது நிறைவேறும் என்ற எண்ணத்திலும் கோரிக்கையைச் சொல்லித்தான் இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறேன். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் கருணையோடு பரிசிலனை செய்து, தொழிலாளர் நல நிதியிலிருந்தாவது, அடுத்த ஆண்டிலாவது ஒரு தொழில் பயிற்சி கல்லூரியை அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோவை மாவட்டத்தில் அரசின் சார்பில் 3 தொழில் பயிற்சி நிலையங்களும், மைய அரசினுடைய அங்கீகாரம் பெற்று 16 தொழில் பயிற்சி நிலையங்களும், மாநில அரசினுடைய அங்கீகாரம் பெற்று 12 தொழில் பயிற்சி நிலையங்களும், இன்றைக்கு இருக்கின்றன. கூடுதலாக ஒரு தொழில் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் அரசுக்கு தொடரா இனச் செலவாக 60 இலட்சம் ரூபாயும், தொடரினச் செலவாக 5 இலட்சம் ரூபாயும் ஆகும். எனவே, புதிதாக தொழில் நிலையம் வால்பாறையில் அமைக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை இங்கே மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சி நிலைய இயக்குநர் சார்பில் இடம் ஆய்வு செய்யப்பட்டு, வால்பாறை பகுதிக்கு தொழில் பயிற்சி நிலையம் அமைக்கலாம் என்று ஒரு பரிந்துரையும் அரசுக்கு

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நல நிதியிலிருந்து, அடுத்த ஆண்டிலோ அல்லது அதற்கு அடுத்த ஆண்டிலோ, மறுபரிசீலனை செய்து, கண்டிப்பாக அந்தப் பகுதிக்கு ஒரு தொழில் பயிற்சி கல்லூரி அமைத்து தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதிநிலையைப் பரிசீலித்து அதன்படி வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 659 திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

659—

விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை.

*4662—திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை எல்லாம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனை செய்து விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம் வேளாண்மை விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் விவசாயிகளுக்கு நல்ல விலைக்கு விற்றுத் தர ஏதுவாக விற்பனைக் குழுக்களின் நிதி நிலைக்கேற்ப போதிய பணியாளர்களும், கிட்டங்கிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா விளைபொருள்களையும் விற்க நிதி நிலைமையை கருத்தில் கொண்டு வேண்டிய ஏற்பாடுகளை இவ்வரசு செய்யும்.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்